பிரத்தியேக விநியோகத்திற்கு மட்டும் — 12 வது ஆண்டுக் கூட்ட சிறப்பிதழ்

எழுச்சி

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

676, காலி வீதி, கொழும்பு-3.

"பொங்கு தமிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு"

எழுச்சி 15 | வள்ளுவராண்டு 2003 யூன் 30 | குரல் 5

# கார் மேகங்கள் சூழுகின்றன! கவனமாயிருங்கள்!!

தோழ,

செயலகக் கட்டிடக் குழுவிலும், செயற் குழுவிலும் அங்கம் வகித்து ஏகமனதாக முடிவுகளை எடுப்பதற்கு முழு இசைவுகளையும் நேரிலும், எழுத்திலும் கொடுத்த ஓர் செயற்குழு உறுப்பினர் — இன்று திடீரென தன் நிலை மாறி-மேலும் இருவரை உதவிக்குச் சேர்த்துக் கொண்டு—உண்மைக்கு மாறான— ஓர் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டு, தினகரன் வீரகேசரி ஆகிய இரு புதினப் பத்திரிகைகளிலும் அறிக்கைகள் விடுத்து தப்பான ஓர் எண்ணத்தை எம்மிடையே வளர்க்க முயல்வதை நீ அறிவாய்!

உள்ளும் — புறமும் — ஒன்றற்ற முறையில் இடத்துக்கிடம் மாறுபட்ட வார்த்தைகளை அள்ளித் தெளிக்கும் இவர்கள் பொது உறுப்பினர்களிடையே ஓர் தெளிவற்ற நிலையை உருவாக்க முயலுகின்றார்கள் இந்நிலையில் செயற்குழுவின் சார்பில் செயற்குழுவின் நிலைமை தெளிவுற விளக்க வேண்டியது எனது தலையாய கடமை.

வீரகேசரி, தினகரன் மூலம் அறிக்கைகள் விட எம்மாலும் முடியும். ஆனால் — பொது மக்களுக்கும், மற்றும் எமது இயக்கத்துக்கு மாறான சக்திகளுக்கும்—எமது சங்கத்தைக் கேலிக்கிடமான — பரிகாசத்துக்குரிய — ஏன் பரிதாபப் படும் பொருளாக — ஆக்கிவிடக் கூடாது என்ற நல்ல எண்ணம் நமக்கிருப்பதே காரணம்.

சங்கச் செயலக கட்டிடம் சம்பந்தமாக முழு விபரத்தையும் முந்திய "எழுச்சி — கட்டிடச் சிறப்பு மலரில்" வெளியிட்டிருந்தோம். இதில் ஏதும் ஐயம், தெளிவு பெற வேண்டிய விடயங்கள் இருந்தால் எம்மிடம் நேரே நீ கேட்பாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு தவறுகள் நேர்ந்து விட்டது என்று தம்பட்டம் அடிக்கும் இவர்கள் — நல்ல நோக்கத்தில் அதைக் கூறினார்களா? சிலவற்றை சீர்படுத்த வேண்டும் என்று மனதாரக் எண்ணினார்களா? என்று நன்கு எண்ணிப்பார். உண்மையில் அவ்வாறு நடந்து இருந்தாலும் அதைச் சுட்டிக்காட்ட பொதுச்சபை உண்டு அங்கு

**மொழி வழி பிரிவோம் உரிமைகள் பெறுவோம்**
**தனி வழிச் செல்வோம், தமிழ் நிலை காப்போம்**

பொது அங்கந்தவர்க்குச் சுட்டிக் காட்ட அவர்களுக்கு பூரண வாய்ப்பு உண்டு.—ஆனால் அவர்கள் பொறுப்பற்ற முறையில் பொய்த் தகவல்களைக் கொண்டு, புதினத் தாழ்களுக்கு அறிக்கை விடுகின்றார்கள்.

இவர்களின் உள்ளார்ந்த நோக்கம் என்ன? தவறு—தவறு — என்னும் இந்த நக்கீர்கள் தாம் கூறும் சரியான திட்டம்தான் என்ன? அப்படி ஏதும் கூறித்தான் இருக்கின்றார்களா? இல்லை — அப்படிக் கூறக் கூடிய சக்தி அவர்களிடம் ஏது — நீண்ட காலமாக எம் கனவில் நிலவிவரும் இக் கட்டிடத் திட்டத்தை தடைப்படுத்திவிட வேண்டும் என்ற தாளாத ஆசையாலல்லவா அவர்கள் அலைகிறார்கள்.

கட்டிடத் திட்டத்தை எதிர்த்து மூவர் செயற்குழுவில் இருந்து வெளியேறியதாக — அவர்களது அறிக்கை கூறுகின்றது — இது முழுக்க முழுக்க சோடிக்கப்பட்ட பொய். திரு. நா. கணேசமூர்த்தி கட்டிடம் சம்பந்தமான முடிவு எடுக்கப்படும் முன்பே ஆய்வு நிலையில் வருமுன்பே-தனது உறுப்பினர் பதவியை விட்டு விலகினார். அதையும் கட்டிட விடயத்தையும் தொடர்புபடுத்துறார்கள் சந்தர்ப்ப வாதிகள் திரு. மு. பத்மநாதன் தனது பதவி விலகலுக்கு தனது விலகல் கடிதத்தில் வேறு காரணங்களைக் காட்டியுள்ளாரேயன்றி கட்டிடம் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை.

நெய்க் குடம் உடைந்தால் நாய்க்கு வேட்டை—ஊர் இரண்டு பட்டால் கூடத்தாடிக்கு வேட்டை —இவை புண்பட்ட உள்ளங்களில் இருந்து வெளிவரும் பண்பட்ட பழமெழிகள். அந்த நிலை இப்போது இல்லை.இனியும் வரக்கூடாது என்பதே எனது வேணவா. கார் மேகங்கள் சூழுகின்றன—எத்தனை காலம் தான் அவற்றால் கதிரவனை மறைக்க முடியும்.

தோழ, சிந்தித்துப்பார் — சுய நலம் ஏதும் இன்றி — இப் பணியை நிறைவு படுத்தும் அவாவால் எழுந்ததே இக் கட்டடத் திட்டம்-உங்கள் தீர்ப்பில் தான்இத் திடத்தின் வெற்றி தங்கியுள்ளது.

— நா. பாலசுப்பிரமணியம்
கௌரவ பொதுச் செயலாளர்

# வித்தியானந்த சர்மாவின் குற்றச் சாட்டிற்கு எங்கள் பதில்கள்
# கபட நாடகக் காரர் யார்? இனம் கண்டு கொள்ளுங்கள்

எத்தனை காலம் நாம் எதிர்பார்த்த திட்டம் இத்தனை சீக்கிரம் இவர்கள் நிறை வேற்றுவதா? - இப்படி ஓர் மன உளைச்சல், கொதிப்பு - ஓர் சிறு தொகையினரிடம் – அவர்கள் பொருமுகிறார்கள்: குமுறுகிறார்கள் பொய்யான தகவல்களைப் பரப்புகிறார்கள்.

பொய்யை மெய்யாக்கல், பித்தளையைப் பொன்னாக்கல், இல்லாததை இருப்பதாகக் காட்டல் - இந்த இரசவாதக் கலையில் கைவந்த சிலர் பொய்யான - பிழையான, தப்பான தகவல்களை - விளம்பரங்களாகவும், பத்திரிகைச் செய்திகளாகவும் வெளியிட்டுச் சங்கத்திற் பிளவு, நிறைவேற்றுக் குழுவில் சந்தேகக் கண்ணோட்டம் இவற்றை எப்படியாவது ஏற்படுத்தி விடல் வேண்டும் என்று திட்டமிட்டுச் செயலாற்றி வருவதை நீங்கள் அறிவீர்கள். வாய்மையே வெல்லும்- இதில் எள்ளளவும் எமக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் எமது நிலையை வெளிப்படுத்துவது எதற்காக: அப் பொய்ப்

பிரசாரத்துக்கு தகுந்த பதில் தரவேண்டிய கடமை எமக்குள்ளது.

உறுப்பினர்கட்கு வேண்டுகோள் விடுக்கிறார்கள் - இரண்டு உறுப்பினர்கள். பல காலம் செயற்குழுவில் இருந்து,விலக வேண்டிய நிலை - தானாக விலகியவர்-உறுதிப் படுத்துகின்றார். இது என்ன நடந்தது என்று அறியாத உறுப்பினர்கள் மனதில் ஏதோ ஓர் பிரமிப்பாகத்தான் தோன்றும்- உண்மையென்ன - அதை உணர்த்துவதே எமது உள்நோக்கம்.

குற்றச்சாட்டுக்களின் முதற் பிரிவு கூறுவது என்ன? கோடீஸ்வரன் வழக்குக்காகச் சேர்த்த ரூபா 65,000/-தை சங்கத் தலைமைப் பீடம் செலவு செய்ய முற்பட்டுள்ளது என்பதாகும் எத்தனை தூரம் மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டு இது கடந்த ஆண்டு அச்சிடப்பட்டு பொதுச் சபையால் நிறைவேற்றப்பட்ட கணக்குக் கூற்றைப் பாருங்கள். இன்று இக் குற்றச் சாட்டுக்களைக் கிளப்பும் குதர்க்க வாதிகளே அன்று செயற்குழுவில் இருந்தார்கள். அதிற் காட்டப்பட்ட தொகை ரூபா 49,129-22 சதம் மட்டுமே! தொகையைக் கூட்டிச் சொல்லுகிறார்கள்—(உங்கள் மனதை மாற்றப் பார்கிறார்கள்)— பொய்யான தகவல்கள்— இதுமட்டுமல்ல— பின்னும் தருகிறோம் இந்நிதி பற்றி மேலும் சில விபரங்களை உங்களுக்குத் தர முனைகிறோம். சட்ட நிதி—சங்க நிதியில் நின்றும் எவ்வகையிலும் வேறுபடுத்துப்படாது ஒரே வங்கிக் கணக்கில் தான் இருக்கின்றது. ‘‘நீண்ட காலம் செயற்குழுவில் இருந்தேன்’’ என்பவர்களுக்கு இதையுமா நாம் நினைவூட்ட வேண்டும்—புதிய அரசியல் அமைப்பு— அரச ஊழியர்களின் நிலை—இம்மாற்றங்களின் பின் சட்ட நிதி என ஒன்று தொடர்ந்து இருப்பது அவசியந்தானா?— கட்டடத்திட்டம் பற்றி வவுனியா பொதுக் கூட்டத்தில் பேசிய போது, திட்டங்கள் வகுத்தபோது எமது நிதி நிலையை கணக்கில் எடுத்துத்தான் அங்கத்தவர்கள் பேசினார்கள்—அங்கு எமது சங்க நிதி—வழக்கு நிதி எனப் பாகுபடுத்தப்படவில்லை. இந்நிதியை நாம் தற்போது செலவு செய்து விடவும் இல்லை. ஆனால் விதண்டாவாதம் புரிபவர்களுக்கு விளக்கவே இதை இங்கு வெளியிடுகிறோம்.

இரண்டாவது குற்றச்சாட்டு விசேட பொதுக்கூட்டத்துக்கு போதிய முன் அறிவித்தல் கொடுக்கப்படவில்லை— கிளைகள் கலந்து ஆலோசிக்கப்படவில்லை—இவைதான். விசேட பொதுக் கூட்டம் ஒன்று கூட்டப்பட வேண்டும் என்பது சென்ற பொதுக் கூட்டத்தில் ஏற்கப்பட்ட முடிவு. அன்றே எல்லா அங்கத்தவரும் அறிந்த முடிவு. விசேட பொதுக்கூட்டத்தைக் கூட்டாது விட்டால், எமது செயற்குழுவிடம் பணித்த பணியை நாம் நிறைவேற்றவில்லை என்றுதான் குறை கூறுவர். விசேட பொதுக் கூட்டம் கூட்ட வேண்டும் என்று அடிக்கடி செயற் குழுவுக்கு வலியுறுத்தியவர்— கூட்டம் கூடிய முறையை ஏற்று—செயற்குழு சார்பில் பதில் அளிக்க வந்தவர்— கூட்டத்தில் காலைவாரி-செயற்குழுவைத் திகைபிலாழ்த்தி-சம்பிரதாயங்களைச் சின்னாபின்னப்படுத்தி—சங்கட நிலைமைக்குள்ளானவர் உறுதிப்படுத்துகின்றார். கிளைச் சங்கங்கள்—தாய்ச்சங்கம் இதுவே இரண்டினதும் தாற்பரியத்தை உணர்தவில்லையா? கிளைச் சங்க உறுப்பினர் யாவரும் தாய்ச் சங்க உறுப்பினர்களே தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் விசேஷ பொதுக் கூட்டத்தில் பங்கு கொண்டு தனது கருத்தை— ஆலோசனையைக் கூற தகுந்த வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டிருந்த போது—எப்படியாவது இத்திட்டத்தை தள்ளிப் போட்டு விடலாம் என்ற தளராத ஆசையால் தவித்த சிலர்—தாம் கிளைச்சங்கச் செயலாளர் என்ற போர்வையில் தடை செய்து விடலாம் என்று கூறும் கருத்தற்ற கபட நாடகமே இது.

‘‘31-3-73ந் திகதியுடன் சங்க நிதியாண்டு முடிவடைந்த பின் அடுத்த இரண்டு மாதத்துக்குள் ஆண்டுப் பொதுக் கூட்டம் நடைபெற்று புதிய செயற்குழுவும், தலைமைப் பீடமும், அமைக்க படும் என்பதால் சங்கத்தின் வழமையான சாதாரன செலவுகளைத் தவிர புதிய பெருந்தொகையான செலவுகளுக்குரிய விடயங்களை பதவி நீங்கும் செயற்குழு கையாள்வதில்லை.’’- இது அவர்களது போலி வெளியீட்டில் உள்ள மற்றொரு குறிப்பு: கடந்த காலத்தைப் புரட்டிப் பாருங்கள்—கபட நாடகக் கார்கள் தங்களது செயற்குழுக் காலங்களில் என்ன செய்தார்கள் என்பதை—கடந்த நிதி அறிக்கையைப் பாருங்கள். அதில் பிரதிமைப்பொறி கொள்வனவு (Duplicating Machine) காட்டப்படவில்லை. ஏன் அவர்கள் குறிப்பிட்ட 31-3-72க்குப் பின் அதாவது 6-6-72ல் பதவி விலகிய செயற் குழுவாகிய அவர்களால் வாங்கப்பட்டது. ஏன் அதற்கு மேலும் உதாரணம் காட்ட வேண்டுமா? 31-3-69க்குப் பின்னரே அப்போது பதவியில் இருந்து விலகிய செயற்குழு 27-4-69ல் திரு. பத்மநாதனுக்கு 15,000/- ரூபாவை பொதுச் சபையின் அனுமதியைப் பெறாமல் வழங்கியது மேல் குறிப்பிட்ட இரு செயற்குழுக்களிலும் இவர்கள் முக்கிய அங்கத்தவர்கள்.

ஆனால் நாம் செய்தது என்ன? விசேட பொதுக் கூட்டத்தைக் கூட்டி கட்டிடம் கட்ட அனுமதி கேட்டோம் ‘கட்டிட நிதிக்கென தனியான ஓர் கணக்கை மக்கள் வங்கியில் திறந்

தோம். அதற்காக நிதி சேர்க்கும் நோக்குடன் கண்டியில் ஓர் நாடகம் நடாத்தி நிகரலாபமாக ரூபா. 1200/- பெற்றோம். செலவு செய்ய வேண்டாம் என்று கோருகிறார்கள். நாம் எங்கே செலவு செய்திருக்கின்றோம். — நிதியை மேலும் சேர்த்தல்லவா இருக்கின்றோம்.

''கிளைச்சங்கங்கள் செயற் குழுவின் தீர்மானத்திற்கு ஆதரவாக கடிதங்கள் எழுதியிருப்பதாகப் பொய்கூறினார் தலைவர்''—இது அவர்கள் சோடித்த மற்றொரு பொய். பொய் கூறவேண்டிய அவசியம் எமக்கு ஏன்?—அப்பழக்கம் அவர்களிடமே இருக்கட்டும்—உண்மையாகவே, கிளைச்சங்க்ங்கள் - தொழில் திணைக்களம், கல்முனைக்கிளை, வவுனியாக் கிளை ஆதியன வாழ்த்துச் செய்தி அனுப்பித்தான் இருந்தன. தனிப்பட்ட முறையிலும் பலர் வாழ்த்துக்கள் அனுப்பியிருந்தார்கள். இதைப்பார்க்க விரும்பும் எந்த அங்கத்தவருக்கும் பார்வையிடத் தகுந்த வாய்ப்பளிக்க நாம் என்றும் தயாராக உள்ளோம்.

சிறப்புக் கூட்டத்துக்கு அங்கத்தவர்கள் வருவதற்கு கடமை விடுமுறை, இலவசப்பயண ஆணைச்சீட்டுக் கிடையாது—எனவே வைத்திருக்க கூடாதென வாதாடுகிறார்கள். இவர்களே விசேட பொதுக்கூட்டம் வைக்கவேண்டும் என வாதாடி பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்ற உதவியாக இருந்தவர்கள். அன்று பொதுச் சபையில் இது பற்றி விவாதிக்கும் போது இவர்களுக்கு இந்த ஞானம் வராது சூனியமானது ஏனோ?—இலவச ஆணைச்சீட்டை எதிர்பார்த்து—விசேட பொதுக் கூட்டம் நடாத்துவது என்றால் இது என்றாவது நடைபெறக்கூடியவிடயமா? அல்லது பொதுச் சபை தீர்மானிக்கும் போது ஆணைச்சீட்டைக் கவனத்தில் எடுக்காமலா விசேட கூட்டம் கூட்ட வேண்டும் என்று தீர்மானித்தது? குதர்கம் புரிகிறார்கள்... குமைச்சல் உள்ளக்காரர்கள்.

''தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக- ஆரம்பகாலம் முதல் செயற்குழு உறுப்பினராக இருந்தவர் — இரண்டு ஆண்டுகள் தலைவராக இருந்தவர்—ஒருவரை செயற்குழு பதவி—விலகும்படி செய்துள்ளது—குற்றம் சாட்டுகிறார்கள். குற்றம் சாட்டியவரே இக்கட்டிடம் சம்பந்தமாக 16-3-73ல் செயலாளருக்கு எழுதிய கடிதத்தின் இருபந்திகளை இங்கு தருகின்றோம்.

கட்டட உபகுழுவின் முடிவு செயற்குழுவின் 'முன்னர் வைக்கப்பட இருப்பதால் எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். வவுனியா நகரஎல்லைக்குள் அதுவும் கச்சேரிக்கு முன்னால் உள்ள காணி எமது சங்கத்திற்கு கிடைக்கும் என்று அறிகிறேன். விஸ்தீரணம் ½ ஏக்கரையில்தான் இருக்குமென்றாலும் இது மிகவும் உன்னதமான இடம். இதனையே தெரிந்து எடுப்பதையே நான் வரவேற்கிறேன். கட்டடமும் நல்லமுறையில் அமைக்கலாம். வங்கிக்கடன் பெற்றுக் கட்டடம் அமைத்தாலும் நல்ல வருமானம் பெற்று கடனைத் திருப்பிக் கட்டலாம் உபகுழுவின் கவனத்திற்கு இந்த யோசனைகளைத் தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.

கட்டட விஷயமாக விஷேட பொதுக் கூட்டம் நடத்த வேண்டுமதலால் மொழிவழித் தொழிற் சங்க கூட்டணி விடயத்தையும் அதே விசேட பொதுக் கூட்டத்திற்கு சமர்ப்பித்தல் நல்லதென நினைக்கிறேன்.''

வெளியில் பத்தினிவேடம் போடும் பசப்புக் காரரின் வார்த்தைகளில் பொய்யை உண்மை என எவரும் நம்பிவிடக்கூடாது என்பதே எமது பேரவா—நீண்டகாலம் செயற்குழு உறுப்பினராக இருந்தவர்—தலைவராக இருந்தவர் என்று பெருமைப் படுத்திக் கொள்ளும் பெரியார்கள்—செயற்குழு முடிவை—செயற்குழுவுக்கு ஆதரவாகப் பேசு வேன்என்று செயற்குழுவிடம் கூறி, மேடையில் ஏறி-திடீரென ஞானோதயம் பெற்று செயற்குழுவை தாக்கிப் பேசுகிறார். நீண்டகாலம் செயற்குழுவில் இருந்த முதிர்ச்சியா இது—இல்லை! இல்லை! இல்லவே இல்லை! ஆனால் தமிழர் வரலாற்றிலே புரையோடிக்கிடக்கும் — புண்பட்ட நிகழ்ச்சிகளை கண்முன் கொணரும் காட்சி இது.

ஏழரை இலட்சம் ரூபாவில் கட்டிடம்! அப்பாடி..... இதை எப்படி எம் சங்கம் தாங்கப் போகிறது—இப்படியும் கூறுகிறார்கள். கட்டிடத் திட்டத்தின் விபரத்தை முந்திய சிறப்பிதழில் தந்திருந்தோம. கட்டிடம் மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. நிதி சேர்த்து—வேண்டிய வழி செய்து—நிலையுணர்ந்தே மூன்று தொகுதிகளும் ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றப் படும்.

சிறந்த திட்டம்—சிலர் எதிர்க்கிறார்கள்—அவர்களது உள்நோக்கம் என்ன?—உய்த்து உணருங்கள்—கள்ளமில்லாமல் கூறுகிறோம்—கடமை உணர்வால் கூறுகிறோம்—பொய்யான பசப்பான வார்த்தைகளில் நிலை தடுமாறி விடாதீர்கள் நிமிர்ந்து நில்லுங்கள் — தொடர்ந்து செல்லுவோம் — என்றும் தோல்வி எமக்கில்லை.

**வாழ்க எழுதுவினைஞர் சங்கம் !**

**ஓங்குக தமிழ் பேசும் தொழிலாளர் ஒற்றுமை !!**

சுதந்திரன் அச்சகம், கொழும்பு-12.